**பாணந்துறை நகர சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாணந்துறை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள பாணந்துறை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு இலாபம் உரிமைகள் மாற்றல் கூற்றில் தனியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பீட்டு இலாபம் உரிமைகள் மாற்றக் கூற்றில் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் மூன்றாவது அத்தியாயத்திற்கு இணங்க மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | இலங்கை பொதுத்துறை நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 164(2) ஆம் பிரிவின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டம் | சுற்றுலா சபையின் கீழ் பதிவு செய்துள்ள 02 ஹோட்டல்களில் இருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | ரெகன் ஹோட்டல் எதிர்வரும் ஆண்டின் போது பணம் செலுத்துவதற்கு இணங்கி இருந்ததுடன் நெவ்ரோ ஹோட்டல் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஜெட்வின் ஹோட்டலில் பட்டயக் கட்டயக் கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்குக் கூற்றுக்களை வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 371 | 2000 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற முற்பண பெறுமதியான ரூபா 1,075,318 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிடுவதற்குள்ள ரூபா 1,075,318 முற்பணத் தொகையில் ரூபா 1,051,250 இனை பதிவழிப்பதற்காக சபை அங்கீகாரத்தின் மூலம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 20 ஆம் திகதிய இலக்கம் 2155 என்ற இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் காண்பிக்கப்பட்ட உப விதிகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 13 விளம்பர அறிவித்தல் பதாதைகளில் இருந்து ரூபா 14,500 கட்டணம் நிலுவையாகக் காணப்பட்டது. | 2023 மார்ச் 25 இல் உள்ளவாறு 11 அறிவித்தல் பதாதைகளில் ரூபா 33,200 கிடைக்க வேண்டியிருந்ததுடன் மேலும் 13 அறிவித்தல் பதாதைகளில் இருந்து ரூபா 14,500 அறவிடவேண்டிக் காணப்பட்டது. | ஆண்டிற்குரிய அறிவித்தல் பதாதை வருமானம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2020 திசெம்பர் 09 ஆம் திகதிய இலக்கம் 08/2020 என்ற மேல்மாகாண பிரதம செயலாளரின் நிதிச் சுற்றறிக்கை | 2014 ஆம் ஆண்டு முதல் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்ற டெக்டர் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பழுதுபார்க்கப்பட்டிருக் கவில்லை. | இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பழுதுபார்ப்பதற்கு அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும் பழுதுபார்ப்பதற்காக கணிசமான தொகை ஒன்று செலவாகின்றமையினால் அதனை எதிர்வரும் ஆண்டின் போது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 74,959,597 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 63,731,152 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | **74,860,300** | **77,321,357** | **54,822,971** | **22,498,385** | **74,780,300** | **74,633,900** | **73,132,658** | **1,501,242** |
| (ii) | வாடகை | **10,152,100** | **6,820,587** | **2,747,037** | **4,073,550** | **1,374,960** | **13,749,600** | **8,783,532** | **4,966,068** |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | **1,797,100** | **458,500** | **458,500** | **-** | **3,445,000** | **3,207,000** | **1,519,888** | **1,687,112** |
| (iv) | ஏனைய வருமானம் | **236,078,610** | **1,201,679** | **1,201,679** | **-** | **78,137,700** | **78,137,700** | **72,133,459** | **6,004,241** |
| | மொத்தம் | **322,888,110** | **85,802,123** | **59,230,187** | **26,571,935** | **157,737,960** | **169,728,200** | **155,569,537** | **14,158,663** |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **வீத வரியும் வரியும்**<br>மீயாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 43,648,051 ஆக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அது ரூபா 32,125,476 ஆகும். | நிலுவையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) **வியாபார நிலைய வாடகை**<br>மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வியாபார நிலைய வாடகை நிலுவை ரூபா 12,815,285 ஆக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்த நிலுவை மீதி ரூபா 14,276,778 வரை அதிகரித்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) **முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 146,421,135 ஆகும். | இந்த பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | முத்திரைக் கட்டணத்தை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **பொது மக்கள் முறைப்பாடு**<br>2022 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 61 பொது மக்கள் முறைப்பாடுகளுக்கிடையே 16 முறைப்பாடுகள் 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைத்திருக்கப்பட்டிருக்க வில்லை. | மேலும் 16 முறைப்பாடுகள் செயற்படு நிலையில் காணப்படுகின்றது. | பொது மக்கள் முறைப்பாடுகளுக்கு தீர்வினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) **காணி மற்றும் கட்டிடத் திட்டங்களை அங்கீகரித்தல்**<br>2022 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற காணிக் கூறிடல் திட்ட விண்ணப்பங்கள் 165 இற்கிடையில் 20 திட்டங்களும் மற்றும் 96 கட்டிட திட்டங்களுக்கிடையே 18 திட்டங்கள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | 20 காணிக் கூறுத் திட்டங்கள் மற்றும் 18 கட்டிட திட்டங்கள் மேலும் அங்கீகரிக்க வேண்டியிருந்தது. | விண்ணப்பங்களுக் காக தேவையான நடவடிக்கைகளை விரைவாக செய்தல் வேண்டும். |
| (இ) **நிலைபேறான அபிவிருத்தி மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம்**<br>நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்காக 2015 முதல் 2030 வரை செயற்றிட்டம் நாளதுவரையாக நீண்ட காலத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்ட போதிலும் 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. குறித்துரைத்த நிகழ்ச்சித் அதில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 03 குறித்துரைத்த நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதற்குரிய நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 03 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நீண்ட கால இலக்கினை அடைந்து கொள்வதற்காக வருடாந்தத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

3.2 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) பாணந்துறை நகர சபைக்குச் சொந்தமான 09 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந்தக் காணிகளுக்கான மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்று கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்படும். | சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக தேசிய சேமிப்பு வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற ரூபா 4,539,351 மீதியொன்று காணப்பட்டதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் அதனை ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணம் தந்திரிமுல்ல நூலகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்காக முன்மொழியப்பட்டிருந்ததுட ன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

### 3.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **நெக்பா அலுவலக மென்பொருள் முறைமை**<br>நகர சபையின் அலுவலக நடவடிக்கைகளை கணனிமயப்படுத்துவதற்காக 07 விடயங்களுடன் மென்பொருள் முறைமை ஒன்று 2017 ஆம் ஆண்டில் நெக்பா கம்பனியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மென்பொருள் முறைமையில் சேவைக் கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 178,500 செலுத்தப்பட்டிருந்த போதிலும் மென்பொருள் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த மென்பொருள் முறைமையைப் பெற்றுக்கொள்வதனைவிட தற்போது பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்தின் Payroll மென்பொருள் மிகவும் வசதியாக இருந்தமையால் அது பயன்படுத்தப்படுகின்றது. | சேவையினைப் பெற்றுக்கொள்ளாமல் செலுத்தப்பட்ட கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |